பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஸு பங்குனி ௴ 23 உ. சனிக்கிழமை [06-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 124

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஏப் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை பத்து மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இதேவேளை—

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று [சனி] காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [ஓ-எ]

# வன்னியை படையினர் கைப்பற்றவே முடியாது!

## பி. பி. ஸியின் கணிப்பு இது

லண்டன், ஏப்ரல் 6

வன்னி ஒரு காட்டுப் பிரதேசம். அது புலிகளின் பாசறை. அதனைக் கைப்பற்றுவது என்பது ஸ்ரீலங்காப் படையினருக்கு முடியாத காரியம்.

—இவ்வாறு கணிப்பீடு செய்திருக்கிறது பி பி. ஸி.

இலங்கை விவகாரம் தொடர்பாக கொழும்பில் உள்ள தமது செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸின் ஆய்வுக் கட்டுரை ஒன்றை பி பி. ஸி. நேற்று ஒலிபரப்பியது. அந்தக் கட்டுரையிலேயே இந்தக் கணிப்பீடு இடம்பெற்றது.

''வன்னிப் பகுதியிலிருந்து விரைவில் ஸ்ரீலங்கா படையினர் விடுதலைப் புலிகளை விரட்டிவிடுவார்கள்'' என்று ஸ்ரீலங்கா இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அண்மையில் கூறியிருந்தது தெரிந்ததே.

அதன் பின்னர் வவுனியா, மன்னார் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதும் தீவிரப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த இராணுவ நடவடிக்கைகள் குறித்து தனது ஆய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர் தாக்குதலில் 15 படையினர் மரணம்

### அரச தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஏப் 6

காரைநகர் கடற்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நேற்று வரை பதினைந்து படையினர் உயிரிழந்தனர்.

கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

காரைநகர் கடற்படைத் தளம் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

இதேசமயம்—

கடந்த புதன்கிழமை நடந்த தாக்குதலின் போது மட்டும் 9 படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்திருந்தனர் என்பது தெரிந்ததே. [ஓ-எ]

## சீனச் சகடை விமானம் நேற்றும் குண்டு வீச்சு

காரைநகர், ஏப் 6

காரைநகர்ப் பகுதியில் சிறிய சீனச் சகடை விமானம் [வை—8] நேற்று முற்பகல் 10 45 மணிக்கும் நண்பகல் 11 55 மணிக்கும்—இரு தடவைகள்—பன்னிரண்டுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது.

அனேக குண்டுகள் களபூமி, நீலன்காடு, பலகாடு பகுதிகளில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

பொன்னாலைப் பாலத்தை நோக்கியும் சகடை விமானம் குண்டு வீசியபோதும், அக்குண்டு கடலில் விழுந்து வெடித்தது என்றும்—

பாலத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## எட்டுச் சடலங்களும் நேற்றுக் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஏப் 6

காரைநகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் எட்டுப் பேரின் சடலங்களும் நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் [மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்றுக்காலை 9 35 மணியளவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் சடலங்களைப் பொறுப்பேற்றனர்.

இந்தச் சடலங்கள் நேற்று மாலையே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளினால் பருத்தித்துறைக் கடற் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## நானாட்டான் சண்டையில் இருபோராளிகள் வீரமரணம்

மன்னார், நானாட்டான் பகுதியில் நேற்று முன்தினமும் தொடர்ந்து கடும் சண்டை நடந்தது.

காலை 10 மணியளவில் நறுவிலிக்குளம் அச்சன்குளம் பகுதிகளில் நின்ற இராணுவத்தினர் ஒரு ஹெலிக்கொப்டர், மூன்று பொம்மர்கள் ஆகியவற்றின் கடும் தாக்குதலுடன் முன்னேறினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இடம்பெற்ற சண்டையை அடுத்து நண்பகல் 11 30 மணியளவில் படையினர் நானாட்டானை வந்தடைந்தனர்.

இந்தச் சண்டையின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். பார்க்குகன் (ஆ நிக்ஸன் — நானாட்டான்), ஹோல்டிங் (பா. ஹிற்லர் பிரேம்ராஜ் — வங்காலை) ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர். [உ]

### வீரமரணம்

நேற்று முன்தினம் காலை 6. 30 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாவது லெப்டினன்ட் இளங்கோ [இராமநாதன் சகாதேவன்—சாம்பல் தீவு, திருகோணமலை] வீரமரணமடைந்தார். [உ]

## நல்லூரில் நேற்று நடந்த சர்வமத பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப் 6

தமிழ் மக்களுக்கு அமைதி வேண்டியும் இலங்கை அரசின் அட்டூழியங்களை உலகுக்கு எடுத்துக் காட்டவும் நேற்று மாலை நல்லூரில் சர்வ மத கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனையில் கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் வண. பிதா ஆபரணம் சிங்கராயர் நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென் இந்திய திருச்சபை சார்பில் வண பிதா ஏ ஜெயக்குமார், அங்கிலிகன் திருச்சபை சார்பில் வணபிதா ஹென்றி விக்ரர், மெதடிஸ்த சபை சார்பில் வண பிதா பி. கோவிந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

பல நூற்றுக் கணக்கான மக்கள் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

''இலங்கை அரசு தமிழர்

[6 ஆம் பக்கம் பார்க்க

## 5 தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் அலிக்கம்பை என்ற இடத்தில் விறகு எடுக்கச் சென்ற ஐந்து தமிழர்கள் மாந்தோட்டம் பகுதி முஸ்லிம் ஊர்காவலரினால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## சகலருக்குமான நிவாரணம் 10 ஆம் திகதிக்கு பின்னரே

### இடம்பெயர்ந்தோருக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ் மாவட்டத்தில் சகலருக்குமான— இரண்டுவாரங்களுக்கான— உலர் உணவு நிவாரண விநியோகம் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பமாகும்.

நிவாரண விநியோகத்தில் இடம் பெயர்ந்தோருக்கு ['இ' அட்டை] முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ் செயலகத்தில் நேற்று உலர் உணவு விநியோகம் சம்பந்தமாக நடந்த கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி முதலில் 'இ' அட்டை உள்ளோருக்கும், அடுத்ததாக தொழில் இழந்தவர்களுக்கும், இறுதியாக உத்தியோகத்தர்கள் உட்பட சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிய வந்தது. [ஓ-5]

## முச்சந்தி முரளி



களாய் எல்லோ கிடக்கு.....!

## 7 மாதக் குழந்தையின் வயிற்றில் இருந்த சிசு!

### யாழ். ஆஸ்பத்திரியில் அதிசயம்

யாழ்ப்பாணம், ஏப் 6

ஏழு மாத ஆண் குழந்தை ஒன்றின் வயிற்றில் இருந்து கருப்பையும், அதற்குள் ஒரு சிசுவும் இருந்து சத்திர சிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் நேற்றுச் சத்திர சிகிச்சைக்கு ஆளான அந்தக் குழந்தை நல்ல சுகத்துடன் இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட ஏழு மாத ஆண் குழந்தையின் வயிற்றின் இடது பக்கத்தில் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் வீக்கம் ஒன்று தென்பட்டதாம். குழந்தை உணவு உட்கொள்வதையும் குறைத்துக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து பெற்றோர் குழந்தையை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். நேற்றுச் சத்திரசிகிச்சை மேற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் வெட்டித் தைக்கக்கூடிய பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும் திருமகள் றேடர்ஸ், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட்முன்] கல்வியங்காடு சந்தை. [16352]

### A/L வினா விடை

10 வருட A/L வினா-விடை அரசியல் மூலதத்துவங்கள், பொருளியல், வணிகமும், நிதியலும் சொற்ப பிரதிகள் வெளிவந்துள்ளன. புத்தகக் கடைகளில் பெறலாம். [16354]

### நீம் தூபம்

நித்தம் புகைத்து நுளம்பு, பூச்சி தொல்லையின்றி நிம்மதியாக நித்திரை கொள்ளலாம். எங்கும் விற்பனையாகிறது. விலை ரூ. 1 50 மட்டுமே. மில்க்வைற். [சி-5920]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சிலை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம்: வியாழன் விடுமுறை. [16278]

### G. C. E. (A/L) தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளோடு பல வருடம் அனுபவம் பெற்றுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: R. பாலா, B Sc; [Cey ] Dip-in-BD 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [16305]

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும், வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்காக 9 வகை மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. கிடைக்கும் இடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4002]

### தவறிவிட்டது

வில்லியம் மேரி அஞ்சலா றோஸ் ஆகிய எனது அடையாள அட்டை [676092722 V] சுண்டிக்குளிக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [16362]

### மணமகன் தேவை

39 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற B A. [Hons] அரசாங்கத்தில் நிறைவேற்று அதிகாரியாக [Executive Post] கடமையாற்றும் மாதம் 10,000 சம்பளமாகப் பெறும் பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை. [16363]

# 30 லட்சம் குர்டிஷ் மக்கள் மலைப் பகுதியில் தஞ்சம்

நிக்கோஸியா, ஏப் 5 ஈராக் அரசுப்படைகளின் இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி சுமார் 30 லட்சம் குர்டிஷ் மக்கள் வடபகுதி மலைகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை — குர்டிஷ் மக்கள் படும் இன்னல்கள் குறித்து தாம் கவலை அடைவதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், ஐ. நா பொதுச் செயலாலர் பெரெஸ் டி குயிலரும் தெரிவித்துள்ளனர்.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

01. பதவி வெற்றிடம்:

வங்கிச் சேவை முகாமையாளர்

தராதரம்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு நிபந்தனைக்கு அமைவாக இருக்க வேண்டும்.

விண்ணப்பம் சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தில் வழங்கப்பட வேண்டும்.

விண்ணப்பம் கிடைக்க வேண்டிய - கடைசித் திகதி: 25 — 04 — 1991

02. பதவி வெற்றிடம்:

இளை முகாமையாளர் - விற்பனையாளர்

[அமைய அடிப்படையில்]

விண்ணப்பம் கிடைக்க வேண்டிய- கடைசித் திகதி: 19 — 04 — 1991

மேலும் விவரம் தேவைப்படின் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்;

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்.

[சி-5926]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கு 91-6-24ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பயிர்த் தொழில் முறையில் பேராசிரியர் [PROFESSOR OF AGRONOMY]**

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூபா: 12,200 - 6 x 300- 14,000/- மாதமொன்றுக்கு

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களும் விவரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் [தாபனங்கள்] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 24 x 10 ச.மீ. அளவுடைய தபால் உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

**குறிப்பு:**

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

-பதிவாளர்

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
1991 - 04 - 04

[சி/5922]

கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பிரதேசப் பாடசாலைகளுக்குத் தேவையான உருக்குத் தளபாடங்கள் வழங்குதல்

01. யாழ். கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆறு கோட்டக் கல்வி அலுவலகங்களினதும் மேற்பார்வையின் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள், உருக்குத் தளபாட உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்களிமிருந்து 03 - 05 - 1991 காலை 10 மணி வரை யாழ். கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. தயாரிப்பாளர் / விநியோகஸ்தர்கள் ஒவ்வோர் தளபாடங்களுக்குமாக தனித்தனியே அவற்றின் கூறுவிலைகளையும், ஒவ்வோர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்காக ஏற்றுக்கூலி உட்பட அவற்றிற்கான கூறு விலைகளையும் வெவ்வேறாகத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**கல்விக் கோட்டங்கள்:**

| | |
|---|---|
| 01 யாழ்ப்பாணம் | 04. பண்டத்தரிப்பு |
| 02 சாவகச்சேரி | 05. வேலணை |
| 03. மருதனார்மடம் | 06. பருத்தித்துறை |

03 இத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் [இணைப் பிரதிகளில்] இத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும் கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது கை மேல் மூலையில ''பாடசாலைத் தளபாடங்களுக்கான கேள்விகள்'' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின்பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச் சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விவரக்கூற்றுக்கள் ஆகியவைகளை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 50/-வும் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூபா 200/- யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் யாழ். இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாக 26-04-1991 காலை 10 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினை [பொது- 172] சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

05 தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விவரம்:

[அ] மாணவர் உருக்குக் கதிரைகள்
[ஆ] மாணவர் உருக்கு மேசைகள்
[இ] பாலர் உருக்குக் கதிரைகள்
[ஈ] பாலர் உருக்கு மேசைகள்

[ஒப்பம்] இ. சுந்தரலிங்கம்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1991-04-04 [சி-5925]

## நன்றித் திருப்பலி

சென்ற மாசி மாதம் 9 ஆம் நாள் இறைவனின் திருப்பாதம் சேர்ந்த சங்கைக்குரிய தாயார் அலோசியா லூஸ்வி அவர்களின் மரித்த 60 ஆம் நாள் நினைவையொட்டி அன்னையவர்களின் புனிதம் நிறைந்த இவ்வுலக வாழ்விற்காகவும், அவரின் தன்னிகரில்லா அன்புப் பணிக்காகவும் நன்றி கூறி எதிர்வரும் சித்திரைத் திங்கள் 8 ஆம் திகதி புனித மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 5 30 மணிக்கு யாழ். ஆயர் மேன்மை தங்கிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெறவுள்ளது. இத்திருப்பலியில் பங்கேற்று எம்முடன் இறைவனுக்கு நன்றி கூற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சிறப்பாக மரித்த அன்னை அலோசியாவை அறிந்தவர்கள், அவரின் அன்புப்பணி பெற்றவர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகாணத் தலைவியும், அருட் சகோதரிகளும்
திருச்சிலுவை கன்னியர் மடம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். [16368]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
10 - 10 - 1961

மறைவு:
19 - 03 - 1990

திதி:
06 - 04 - 1991
சனிக்கிழமை

பஞ்சலிங்கம் சிந்தாமணி தம்பதிகள் பெற்றெடுத்த
**பத்மநாதன்** [B. B. A. பட்டதாரி]
(S. S. O. துணுக்காய்)
என்னும் அன்புச் சுடர்

ஆக்கிரமிப்புப் படையின் திட்டமிடாச் செயலினால்,
அநியாயமாய் ஷெல் பட்டு ஓராண்டாயினும்;
ஷெல் சத்தங்கள் இனும் ஓய்ந்தாகவில்லையே!
வியாக்கிரபாதகர் தம் திட்டமிடாச் செயலினால்,
உன் உறவினர்கள், நண்பர்கள்
திக்கெட்டும் சிதறுண்டார்;
அந்நிலையில் உன் திதி செய்ய
எமக்கென்ற மனையுமில்லே!

தாய், சகோதரர்,
மைத்துனிமார், பிள்ளைகள்;

நெசவுசாலை ஒழுங்கை,
மாவிட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பளை. [16298]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

A/L 91

மீட்டல் பிரிவு - 2

DAY CLASSES

ஆரம்பம்: 8 - 4 - 1991

(காலை 8-00 மணி)

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. இரட்ணம்
கணக்கியல் — திரு S.K. பிரபாகரன்
அளவையியல் — திருமதி மதி

மற்றும் அனைத்து பாடங்களும்

மு. குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது. [சி-5903]



# "நிதர்சனம்"

நிறுவனத்தால் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. செய்தியாளர்
[Journalist]
[அ] பத்திரிகை நிறுவனமொன்றில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவம்.
அல்லது
பத்திரிகை நிறுவனமொன்றில் பத்திரிகையாளராக 5 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்.
அல்லது
இதற்குச் சமனான தகைமை.
[ஆ] ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கணிக்கப்படும்.

2. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்
[Programme Editor]
[அ] கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
[ஆ] கலைஞர்களிடமிருந்து பெறப்படும் ஆக்கங்களை மதிப்பீடு செய்யவும், தணிக்கை செய்யவும், செப்பனிடவும் போதிய ஆற்றலும், அனுபவமும் இருத்தல் வேண்டும்.

3. பிரதி எழுதுபவர்
[Script Writer]
[அ] கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
[ஆ] சிறந்த எழுத்தாற்றல் இருத்தல் வேண்டும்.

4. இசைத் தயாரிப்பாளர்
[Music Organizer]
[அ] "இசைக் கலைமாணிப்" பட்டம்
அல்லது
வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரம்.
[ஆ] இசைத் துறையில் 7 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடையவருக்கு கல்வித் தகைமையில் விலக்களிக்கப்படும்.

5. தகவல் சேகரிப்பாளர்
[Information Officer]
[அ] க.பொ.த. [சா.த.] கணிதம், விஞ்ஞானம் தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி.
[ஆ] பொது விவேகமும், ஆங்கில அறிவும், சிறப்புத் தகைமைகளாகக் கருதப்படும்.

6. மக்கள் தொடர்பு அலுவலர்
[Public Relations Officer]
[அ] க.பொ.த. [சா.த.] கணிதம், விஞ்ஞானம் தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி.
[ஆ] ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.
[இ] மக்களுடன் பழகும் தன்மை கவனத்தில் எடுக்கப்படும்.

★ ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்துடன் தங்களது தகைமைச் சான்றிதழ் பிரதிகளையும், அனுபவச் சான்றுப் பிரதிகளையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
★ விண்ணப்பங்கள் யாவும் முழுமையான விவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு 1991 - 04 - 15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
★ தகுதிக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும்.

பொறுப்பாளர்,
"நிதர்சனம்"
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1991-04-03 [சி-5918]


# மருந்து விலைகளில் வீழ்ச்சி; தட்டுப்பாடும் ஓரளவு நீங்கியது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ். மாவட்ட தனியார் மருந்துக் கடைகளில் மருந்து விலை தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த மாதங்களில் மருந்து வகைகள் யானை விலை குதிரை விலையில் விற்கப்பட்டதால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

விலை அதிகரிப்புக் குறித்து ஆங்கில மருந்து வர்த்தக சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து மருந்து விலைகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன என்று சங்கச் செயலாளர் ஸ்ரீகணேசன் தெரிவித்தார்.

மேலும் தற்போது மருந்துக் கடைகளில் கையிருப்பில் உள்ள மருந்து வகைகள் இன்னும் இரண்டு மாத காலத்திற்கு போதுமானவை என்றும், மருந்துத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [இ-15]

## வவுனியா காமினியில் பல்கலைக்கழகக் கல்லூரி

வட மாகாணத்திற்கான பல்கலைக் கழகக் கல்லூரியை நிறுவுவதற்கு வவுனியாவில் உள்ள காமினி வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை வன்னி மாவட்ட எம். பியும் கல்வித் துணை அமைச்சருமான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

காமினி மகாவித்தியாலயம் இப்போது வவுனியாவில் இராணுவத்தினரின் மிகப் பெரிய முகாமாக இருக்கிறது என்பதும்—

அதுவே தடுப்பு [சித்திரவதை] முகாமாக விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். [இ-எ]

## நாடகங்கள் தெரிவு

தென்மராட்சி, ஏப்பிரல் 6

முத்தமிழ் விழாவை ஒட்டி தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற நாடகப் போட்டியில் மீசாலை] கலை, கலாசாரப் பிரிவின் "தீர்வு", "விடியலைத்தேடி" என்னும் இரு நாட்டிய நாடகங்களும், மிருசுவில் உசன் மாணவர் அமைப்பின் "மீண்டும் எழுவோம்" என்னும் நாடகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சி கலை, கலாசாரப் பொறுப்பாளர் செல்வராசா இதனைத் தெரிவித்தார். [இ - 117]

## கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

பொது கத்தோலிக்க சேமக்காலை ஒன்றுக்கு இடம் ஒதுக்கித் தருமாறுகோரி நல்லூர், திருநெல்வேலி, அரியாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட கத்தோலிக்கக் குடும்பங்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை மூலம் மாநகர சபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. [இ-த]

## செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் பற்றித் தீர்மானம் எடுப்பதற்காக எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ். செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சகல திணைக்களங்களின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். [இ-5]

## பாம்பு தீண்டி மரணம்

தென்மராட்சி, ஏப். 6

நாடகம் பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் பாம்பினால் கடியுண்டு மரணமான சம்பவம் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றது.

செல்லத்துரை ஆறுமுகம் [வயது 23] என்பவரே மரணமானவர் ஆவார் [இ - 177]

## நெடுந்தீவில் கால்நடை நோய்

யாழ்ப்பாணம், ஏப். 6

நெடுந்தீவில் கால்நடைகளுக்கு ஏற்பட்ட நோயினால் 65வீத கால்நடைகள் இறந்துள்ளன.

அப்பகுதி உதவி அரசாங்க அதிபர், யாழ். கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதை அடுத்து இங்கிருந்து உடனடியாக கால்நடை வைத்தியர் ஒருவர் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். [இ-100]

## அராலியில் திருட்டு

அராலி, ஏப்ரல் 6

அராலி மேற்கில் ஒரே இரவில் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வீடு ஒன்றில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

உலோகிட்டி பிள்ளையார் கோயிலுக்குரிய உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.

இன்னொரு வீட்டில் விறாந்தையில் வைக்கப்பட்டிருந்த தளபாடங்கள் களவாடப்பட்டுள்ளன. [இ-12]

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு நுண்காட்டி

கொழும்புத்துறை, ஏப்ரல் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் நோயாளர்களின் நலன் கருதி நுண்காட்டிக் கருவி ஒன்றை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அன்பளிப்பாக வழங்கினார்.

இந் நுண்காட்டிக் கருவி முப்பதினாயிரம் ரூபா பெறுமதியுடையது. [இ-30]


## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

12 - 05 - 1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப 3-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதைச் சகல பழைய மாணவருக்கும் அறியத்தருகின்றேன். வேட்பு மனுக்கள் பிரேரணைகளை 22 - 04 . 1991க்கு முன் சமர்ப்பிக்கவும்.

வீ. ஜெயபாலன்,
கௌரவ செயலாளர்.

11, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். [16356]



## போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

[யாழ். பெரியாஸ்பத்திரி]

# கேள்வி விளம்பரம்

## சலவை ஒப்பந்தம்- 1991-1992

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 1991-05-01 தொடக்கம் 1992-04-30 வரை சலவை செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் 1991-04-22 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/-ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்கள் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10 மணிக்கு பின்வரும் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் பிணைப் பணமாக ரூபா 1500/-ஐச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திரும்பக்கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஏப்ரல் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலயம் திறக்கப்படும்போது கேள்வி தாரர்களோ அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்கவும்.

மேதிலக விவரங்களை இவ் வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் செல்வி பு. சண்முகம்

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 1-4-1991 [சி/5924]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

அமரர் நாகமுத்து துரைச்சாமி

அவர்களின்

# ஓராண்டு நினைவு



தோற்றம்: 01-01-1925 | மறைவு: 01-04 1990

திதி: 06-04-1991

பூண்ட சஷ்டியிலே புகழுடம் பெய்திட்ட
பொன்னான உனையெண்ணி நாம்
ஆண்டு ஒன்றாக அல்லலுற் றிருந்திட்டோம்
ஆரெமக் கிங்கு துணை
நீண்டு பறந்திட்ட நின்மறைவின் ஓராண்டு
நிறைவாக வந்த போது
வேண்டு தல்கள்பல விருப்புடன் செய்துநாம்
விருந்துமே படைத்தோம் தாயே.

அன்புடன்

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

''பழமுதிர்ச்சோலை''
11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு [16351]

## பனையில் பனஞ்சீனி

தாளையடி, ஏப்ரல் 6

பளையில் நாளொன்றுக்கு ஆயிரம் போத்தல் பதநீரில் பனஞ்சீனி உற்பத்தி செய்ய பச்சிலைப் பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. [இ-144]

## உணவு நிறுத்தம்

அனலைதீவு, ஏப். 6

வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதகாலமாக உணவு வழங்கப்படுவதில்லை. [இ-18]

## தென்மராட்சியில் அன்னை பூபதி நினைவு தினம்

தாளையடி, ஏப்ரல் 6

அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவை யொட்டி, பளை கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி பளையில் நடைபெறும்.

அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவு தின விழா எதிர்வரும் 18 ஆம் திகதி பளையில் நடைபெறும். [இ-144]

## விடைத்தாள் அனுப்புவதில் தாமதம்!

யாழ்ப்பாணம், ஏப். 6

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சையின் விடைத் தாள்கள் இன்னும் கொழும்புக்கு அனுப்பப்படவில்லை.

போக்குவரத்து சீரில்லாத காரணத்தால் விடைத்தாள்களை அனுப்ப முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## சென்னையில் பூசை

இலங்கையில் சாந்தியும், சமாதானமும் நிலவவேண்டி சென்னையில் பூசையும், பிரார்த்தனையும் நடத்தப்பட்டன. [அ-எ]

# இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்க உத்தரவு

காரைநகர், ஊர்காவற்றுறை இளவாலை, கீரிமலை போன்ற இடங்களில் இருந்து புதிதாக இடம் பெயர்ந்துவந்துள்ள குடும்பங்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குமாறு வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஏ. வி. ரி. திவாகராசா உத்தரவிட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவையாளர்களுக்கு இது தொடர்பாக பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காரைநகர், ஊர்காவற்றுறை, இளவாலை போன்ற இடங்களில் இருந்து சுமார் முன்னூறுக்கும் அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்கு வந்துள்ளனர். [இ - 90]

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 29 - 8 - 1933

இறப்பு: 18 - 3 - 1990

திதி: 6 - 4 - 1991

## பொன்னம்பலம் அழகரத்தினம்

(இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர்)

அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதர, சகோதரிகள்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில். [4005]

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராசரத்தினம் பிரிதிவிராஜ்

[கொக்குவில் இந்துக்கல்லூரி, பழைய மாணவன்]

தோற்றம்: 7-6-1962 | மறைவு: 1-4-1986

திதி: 6-4-1991 [லண்டன்]

அன்பு மகனே அருமைச் செல்வமே
நீ எமக்கு விடை கொடுத்து இன்றுடன்
ஆண்டுகள் ஐந்தும் ஆனதுவா?
நேற்றைய கனவுபோல நினைவில் எமக்கு...
ஆற்றாது அழுகின்றோம் - எம்மை
தேற்ற நீ இங்கே ஓடிவரமாட்டாயா?
விழியோரங்கள் கசிந்துருக
நினைவெல்லாம் நின்னதுவாகி
நிஜமாய் மரணிக்காமல்
நித்தமும் நாம் மரணிக்கின்றோம்
எம் துயரம் உன் செவி ஏறாதா?
எம் கண்ணீரும் ஒருநாள் கரைதான் காணாதா?

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆண்டவனை வேண்டும்:

தந்தை, தாய், தங்கை.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [சி/4824]


# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(முன்னை நாள் BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## க. பொ. த. உயர்தர கலை, வர்த்தக வகுப்புகள்

**A/L 92**
புதிய பிரிவு
ஆரம்பம்:
13-04-1991
சனி 8-00 a.m.

**A/L 91**
மீட்டல் வினா
விடை வகுப்பு
ஆரம்பம்:
13-04-1991
சனி 12-00

★ எமது கல்வி நிறுவன மாணவர்களுக்கு இவ்வகுப்பு இலவசம்.
★ வெளி மாணவர்களில் 100 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

எமது தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர் குழு

பொருளியல்:
திரு. வரதராஜன்
அளவையியல்:
திரு. S. S. மனோகரன்
கணக்கியல்:
திரு. மரியதாஸ்
திரு. சௌந்தி
வர்த்தகம்:
பிரபல விரிவுரையாளர்
திரு. லோகசிங்கம்
தமிழ்:
திருமதி மீரா
இந்துநாகரீகம்:
திரு. ஜோதீஸ்வரன்
புவியியல்:
திரு. ஜோசப்

**A/L 91**
பகல் நேர வகுப்பு

★ முழுப்பாடத்திட்ட வகுப்பு
★ மீட்டல் வினா விடை வகுப்பு

ஆரம்பம்:
10-04-1991

★ முன்னணி விரிவுரையாளர்கள் ஒருங்கிணைந்துகற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.
★ முழுப்பாடத் திட்டமும் முற்றாக முடிக்கப்படும்.
★ வினாவிடைவகுப்பு இலவசம்.
★ பகல் நேர வகுப்பு [illegible] நடைபெறும்.

[16360]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறைமுக ஒப்புதலா?

வடக்கு - கிழக்கில் இப்போது நடந்துவரும் யுத்தத்தில், விமானக் குண்டு வீச்சு நடத்தும் அணுகுமுறை குறித்து அரசு மீள் சிந்தனையில் ஈடுபட்டிருப்பதாக—

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்!

விமானக் குண்டு வீச்சுக்குப் பதிலாக, பிரச்சினையைப் புதிய முறையில் அணுகும் சாத்தியம் இருப்பதாகக் கூறிய பிரட்மன், அந்த மாற்று அணுகுமுறை எது என்பதைச் சொல்லாமல் விழுங்கிவிட்டார்!

போராளிகளின் இலக்குகளைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு, பொதுமக்களின் குடியிருப்புகள், பாடசாலைகள், ஆலயங்கள் மீது கடந்த பத்து மாதங்களாக விமானக் குண்டு வீச்சுகள் நடந்து வருவதே உண்மை. இதுவரை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுக்களினால் சேதமடைந்தவை, நிர்மூலமானவை, 99 சதவீதத்துக்கும் மேலானவை பொதுமக்களின் உடைமைகளே. இறந்தவர்களில் 99 சதவீதமானோருக்கு அதிகமானவர்கள் பொதுமக்களே.

ஆனால் அரசு இந்த உண்மையை மறைத்து வந்தது; மறுத்தும் வந்தது. சரியான தொழில் நுணுக்கத்துடன் எதிரிகளின் இலக்குகள் மீதே விமானத்தாக்குதல் நடத்தப்படுவதாகவும், ஒரு சில சமயங்களில், யுத்தத்தின் இடையில் அகப்பட்டு பொதுமக்கள் உயிரிழப்பது தவிர்க்க முடியாதது என்றும், எந்த யுத்தத்திலும் அது சகஜம் தானென்றும் காலஞ்சென்ற ரஞ்சன் கூறி வந்தார்.

ஆனால் பிரட்மனின் இப்போதைய கூற்று விமானக் குண்டு வீச்சினால் பொதுமக்களின் உயிர்களும், உடைமைகளுமே அழிகின்றன என்பதை ஒப்புக் கொள்வதாக உள்ளது. அதனை அவர் நேரடியாகச் சொல்லாது, தொழில் நுட்ப மொழியில், ராஜதந்திரமாகப் பகர்ந்திருக்கிறார்.

உலகை ஏமாற்றித் தனக்கு வேண்டிய உதவிகளையும், சலுகைகளையும், அனுவல்களையும் பெறுவதற்காக, யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று காட்டுவதற்கு அரசு முனைகின்றது. ஆனால் உண்மையை நீண்ட காலத்திற்கு ஒளித்து வைத்து விளையாட முடியாது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். பிரட்மனின் புதிய அணுகுமுறை குறித்த மறைமுகக் கூற்று அந்த உணர்வின் ஆரம்பமோ என்று கருதவேண்டி உள்ளது. அதாவது தமிழர்களை வேறு நாட்டு மக்களாகக் கருதி அவர்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தியதை அரசு 'பிடிபடாமல்' ஒப்புக் கொள்ள முனைகிறது என்பதாகும்.

எனினும் அரசினையும் சிவில் நிர்வாகிகளையும் விட நீண்டுயர்ந்து மேலோங்கி விட்ட இராணுவம், விமானத் தாக்குதலை நிறுத்த மறுத்து வருகிறது. அதனை நிறுத்தினால் விரைவில் தான் தோல்வி கண்டதாக நேரிடும் என்ற மனப்பயம் இராணுவத்துக்கு உண்டு. உண்மையும் அதுவே!

இந்த நிலைப்பாட்டை வெளிநாடுகள் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். தாம் கொழும்பு அரசுக்கு அளிக்கும் சகல உதவிகளும், ஓர் இனத்தை அழித்துவரும் அரசுக்கு வழங்கப்படும் உதவி என உணர்ந்து கொள்ள வேண்டும்.

# இரணைமடுக் குளத் திட்டத்தின் கீழ்

# 10 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகம்

## கடந்த ஆண்டைவிட இரண்டு மடங்கு

கிளிநொச்சி, ஏப்ரல் 6

கிளிநொச்சி இரணைமடுக் குளத் திட்டத்தின் கீழ் இந்த முறை 10,500 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த வருடம் 4,500 ஏக்கரிலேயே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இரணைமடு குளத்தில் 31 அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு உள்ளதே கூடுதலான நிலத்தில் சிறுபோக செய்கை மேற்கொள்ளக் காரணம் ஆகும்.

இரணைமடுக் குளத் தண்ணீர் சிறுபோக நெற் செய்கைக்காக எதிர்வரும் 15 ஆம் திகதி திறந்துவிடப்படும்.

நெற் செய்கைக்காக தண்ணீர் பங்கு மாற்றுபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு இடையில் தமது பங்குகளை மாற்றும்படி கோரப்பட்டுள்ளனர். [இ-76]

## மலிவு விற்பனையில் கொப்பிகள்

மானிப்பாய், ஏப்ரல் 6

மருதனார்மடம் கோட்டக் கல்விப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

இக் கொப்பிகளை பெற்றுக் கொள்வதற்காக இக் கோட்டத்துக்குரிய கொத்தணி அதிபர்கள் சகலரையும் எதிர் வரும் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் சமுகமளிக்கும்படி மருதனார்மட கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். இரத்தினராசா அறிவித்துள்ளார். (இ-90)

## ஆசிரியர்களுக்கு புதிய இடமாற்றத் திட்டம்

கொழும்பு, ஏப். 6

ஆசிரியர்களுக்கான புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று கல்வி அமைச்சினால் விரைவில் அமுல் நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் பற்றிய விபரம் முதலில் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள் தாம் விரும்பிய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## இரத்த தானம் செய்த மாணவர்

ஸ்ரீலங்காப் படையினருடன் மோதலில் காயம் அடைந்த போராளிகளுக்கு இரத்தம் வழங்கிய கனகரத்தினம் மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயம், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, சொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

## அமெரிக்க செனட்டர் உட்பட 6 பேர் விமான விபத்தில் பலி!

வாஷிங்டன், ஏப்ரல் 5

அமெரிக்க செனட்டர் ஜோன் ஹெய்னும் வேறு ஆறு பேரும் விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த விமானம், ஹெலிக்கொப்டர் ஒன்றுடன் மோதி பாடசாலை ஒன்றின் விளையாட்டு மைதானத்தில் விழுந்து நொருங்கியது.

அந்தச் சமயத்தில் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த 2 மாணவர்களும் அப்போது கொல்லப்பட்டனர். [இ-எ]

## விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அஞ்சலி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

கடந்த 27 ஆம் திகதி கிரிமலையை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் காயமடைந்த போராளிகளை மீட்கக் களம் சென்ற வேளை எதிரியின் துப்பாக்கிக் குண்டை ஏந்தி வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அங்கத்தவர் வேலாயுதம் ஜெகநாதனுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

மகாஜனாக் கல்லூரியில் ஜி சீ ஈ. உயர்தர வகுப்பில் வர்த்தகத் துறையில் கல்வி பயின்ற வேலாயுதம் ஜெகநாதன் களத்தில் காயம் அடையும் போராளிகளுக்கு உடல் உதவி செய்யும் முதலுதவிப் பிரிவில் கடந்த பல காலமாக அங்கம் வகித்து வந்தார் என்றும்—

தமிழ் மண்ணில் விழும் ஒவ்வொரு செங்குருதியும் சிவந்து, எம் விடியலை வேகமுள்ளதாக்கும் என்பதை உணர்ந்து உத்வேகத்துடன் செயற்பட்டார் என்றும் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் தெரிவித்துள்ளது. [இ]

## எர்ஷாத் எம். பியாக பதவிப் பிரமாணம்

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் நேற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் தாம் போட்டியிட்ட ஐந்து தொகுதிகளிலும் அவர் வெற்றியீட்டியிருந்தார் என்பது தெரிந்ததே.

ஜெனரல் எர்ஷாத், சிறையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் புதனன்று நாடாளுமன்றத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

முன்னாள் உதவி ஜனாதிபதி அஹ்மதும் முன்னாள் உள்துறை அமைச்சர் ஹஜாரும் டாக்கா சிறையில் இருந்து நாடாளுமன்றத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டு, ஜெனரல் எர்ஷாத்துடன் எம். பி பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர். [அ-எ]

## சோவியத் யூனியனில் விலை அதிகரிப்பு

சோவியத் யூனியனில் பாண், இறைச்சி ஆகியவற்றின் விலைகள் இரட்டிப்பாகவும், சில இடங்களில் மும்மடங்காகவும் அதிகரித்துள்ளன.

அரச ஆதிக்கத்தை மாற்றி சந்தைப் பொருளாதாரக் கொள்கையை மாஸ்கோ அரசு பின்பற்றத் தொடங்கியதைத் தொடர்ந்தே இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

# சோவியத் - ஜப்பானிய உறவுக்கு தடையாக உள்ள குரில்ஸ் தீவுகள்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதிக் கட்டம்...

06-08-1945 இல் ஹிரோஷிமா நகர் மீது முதலாவது அணுகுண்டை அமெரிக்கா வீசியது.

09-08-1945 இல் நாகஸாகி மீது இரண்டாவது அணுகுண்டை அமெரிக்கா போட்டது.

10-08-1945 இல் பொட்ஸ்டாம் பிரகடனத்தை ஏற்பதாக ஜப்பான் அறிவித்தது.

15-08-1945 இல் சரணாகதி அடைவதாக ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிற்றா ஜப்பான் வானொலி மூலம் அறிவித்தார்.

27 - 08 - 1945 இல் ஜப்பான், சகாமி கடலில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் பிரவேசித்தன.

ஜப்பானின் அட்ஸுகி விமானத்தளத்தில் அமெரிக்க இராணுவம் இறங்கியது.

02-09-1945 இல்... டோக்கியோ குடாவில் நிலை கொண்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல் 'மிசூரி'யில் வைத்து நிபந்தனையற்ற சரணாகதி உடன்படிக்கையில் ஜப்பான் கைச்சாத்திட்டது.

இதன் பின்னர் தான் சான் பிரான்ஸிஸ்கோ உடன்படிக்கை 1951 இல் கைச்சாத்திடப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தில் கலந்து கொண்ட நாடுகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

ஆனால் ஒரு நாடு மட்டும் கைச்சாத்திடவில்லை. அந்த நாடு சோவியத் யூனியன் தான்.

> அண்மையில் முடிந்த வளைகுடாப் போர் தொடர்பான நிரந்தர யுத்த நிறுத்தம் இன்னும் ஏற்படவில்லை. அதுசம்பந்தமான சமாதான உடன்படிக்கையைத் தயாரிப்பதில் ஐ. நா. பாதுகாப்புச் சபை ஈடுபட்டு வருகிறது. அதன் பின்னர் தான் போரில் ஈடுபட்ட நாடுகள் உடன்படிக்கையில் கைச்சாத்திடும்.
>
> ஆனால் - 40 ஆண்டுகள் சென்ற பின்வரும் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடர்பான சமாதான உடன்படிக்கையில் ஒரு நாடு இன்னும் கைச்சாத்திடாமல் இருந்து வருகிறது.
>
> அது பற்றியவிவரங்களை இக்கட்டுரை தருகிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜேர்மன் சரணடைந்து மூன்று மாதங்கள் கழிந்து...

8 - 8 - 1945 நள்ளிரவு சோவியத் வெளியுறவு அமைச்சர் மொலட்டோவ், மாஸ்கோவில் ஜப்பானியத் தூதர் திரு. சாட்டோவை தனது அலுவலகத்திற்கு அழைத்தார்;

''9 - 8 - 1945 அன்று ஜப்பான் மீது சோவியத் யூனியன் யுத்தப் பிரகடனம் செய்கிறது'' - இப்படி திரு. மொலட்டோவ் ஜப்பானிய தூதுவரிடம் கூறினார்.

அப்போது ஆகஸ்ட் 9 ஆம் திகதி அதிகாலை......

நாகஸாகி மீது இரண்டாவது அணுகுண்டை அமெரிக்கா வீசிய தினம்...

சோவியத் துருப்புகள் ஜப்பானின் பிடியில் இருந்து மஞ்சூரியாவையும் கொரியாவின் அரைவாசியையும் மீட்டன.

ஜப்பானுக்கு சொந்தமான தெற்கு சஹாலின் மற்றும் குரில்ஸ் ஆகிய நான்கு தீவுகளையும் சோவியத் துருப்புகள் கைப்பற்றின.

### இன்றைய நிலை

அத்தீவுகள் இன்றும் சோவியத் யூனியனின் ஆதிக்கத்தின் கீழ் தான் உள்ளன.

இதனால்தான் சோவியத்-ஜப்பான் உறவு இன்னும் சீரடையாமல் உள்ளது.

இத்தீவுகளை மீண்டும் பெறுவது தொடர்பான இராஜதந்திர பேச்சுக்களை ஜப்பான், மாஸ்கோ அரசுடன் நடத்தி வருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் சோவியத் ஜனாதிபதி மிக்செயல் கோர்பச்சேவ் டோக்கியோ செல்லவிருக்கிறார்;

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் சோவியத் தலைவர் ஒருவர் ஜப்பான் விஜயம் செய்யவிருப்பது இதுவே முதல் தடவையாக இருக்கப்போகிறது.

நான்கு தீவுகளில் இரண்டையாவது கோர்பச்சேவின் விஜயத்துக்கு முன்னர், ஜப்பானிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாஸ்கோ அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜப்பானின் இந்தக் கோரிக்கை நிறைவேறுமா? 1957 சான் பிரான்ஸிஸ்கோ சமாதான உடன்படிக்கையில் 45 ஆண்டுகளுக்கு பின்னராவது சோவியத் யூனியன் கையெழுத்திடும் நிலை ஏற்படுமா?

கோர்பச்சேவின் ஜப்பான் விஜயம் இவற்றுக்கு எல்லாம் பதிலளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மோதலில் படையினருக்கு பேரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

வவுனியா பம்பைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் ஸ்ரீலங்கா படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சூடுவெந்தபுலவு, பழையூர் இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு பம்பைமடுவுக்கு வந்தபோது இந்த மோதல் வெடித்தது.

நண்பகல் 11 மணி வரை இச்சண்டை நீடித்தது.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் விக்டர் [அ. சுந்தரலிங்கம் - இறம்பைக்குளம், வவுனியா], பாலு [செ. சுந்தரலிங்கம் - சின்னக்குளம், வவுனியா] ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர்.

# சண்டைக்கு விரைவிலேயே முற்றுப்புள்ளி வைப்பாராம்!

## ஜனாதிபதி பிரேமா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 6

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சண்டைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

ஜனாதிபதி பிரேமதாஸா புத்தளம் பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்படவேண்டும். யுத்தத்தின் மூலம் இதற்கு தீர்வு கண்டுவிட முடியாது என்றும் திரு பிரேமதாஸா சொன்னார்.

மாத்தறையில் நடந்த இன்னொரு கூட்டத்தில் பேசிய அவர் ''நாட்டின் முன்னேற்றப்பாதையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிக்க முடியாது'' என்றார். [இ-எ]

## இளைஞர் படுகொலை

யாழ்ப்பாணம், ஏப். 6

மட்டக்களப்பு மாவட்டம் நாவற்குடாவில் நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு பாலசுந்தரம் இரவீந்திரன் [வயது 31] என்ற இளைஞர் புளொட் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரியவருகிறது. [உ]

## மரண தண்டனை

அம்பாறை மாவட்டம் கோணாவிலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பற்றியும் அவர்களது உதவியாளர்கள் பற்றியும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குத் தகவல் கொடுத்து வந்ததாகக் கூறப்படும் ஒருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு கில்பேர்ட் என்ற இந்த நபருக்கு கோணாவிலில் வைத்து விடுதலைப் புலிகள் மரண தண்டனை நிறைவேற்றினர். [உ]


## வண்ணை கலட்டி
## ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

கலட்டி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று [06 - 04 - 91] காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 14 - 04 - 91 ஞாயிறு புதுவருட தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

[C/5929 நிர்வாக சபையினர்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் - 3
போட்டிப் பரீட்சைக்கு அதிபர்,
ஆசிரியர்களை தயார் செய்வதற்கான
பயிற்சி வகுப்புகள்.

இடம்:- யா / வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்

★ வடபிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

காலம்: 1991 ஏப்பிரல் 07, 16, 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் தினமும் காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகும்.

போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் சகல அதிபர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கோருகின்றோம்.

யாழ். மாவட்டத்துக்கு வெளியேயிருந்து வந்து கலந்து கொள்வோருக்கு 1991 ஏப்பிரல் 16 தொடக்கம் 20 வரை தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

கல்வித் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக/ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள், பிரபல கல்லூரிகளின் அதிபர்கள் விரிவுரையாற்றவுள்ளனர்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்.

இ. த ஆ. ச. தலைமைப் பணிமனை,
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
05 - 04 - 1991. [C/5927]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கேரள அரசு கலைப்பு

திருவனந்தபுரம், ஏப். 6

கேரள மாநில சட்டசபை நேற்றுக் கலைக்கப்பட்டது.

முதலமைச்சர் ஈ. கே. நாயனாரின் சிபார்சைத் தொடர்ந்து ஆளுநர் சட்டசபையைக் கலைக்கும் பிரகடனத்தை வெளியிட்டார்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டசபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# ஷெல், பீரங்கி சத்தங்கள்

காங்கேசன்துறை, ஏப். 6

கட்டுவன், வீமன்காமம் பகுதிகளில் நேற்றுக் காலை 5 மணியளவில் ஷெல் மற்றும் பீரங்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. துப்பாக்கிவேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவும் இப்பகுதிகளில்இடையிடையே வெடிச் சத்தங்கள் கேட்டன. [ஒ-68]

# பரீட்சைக்கான கருத்தரங்கு

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

வட மாகாண ஆசிரியர் சங்கத்தினால் இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [ஒ 3]

# எய்ட்ஸுக்கு ஊசி மருந்து

எயிட்ஸ் நோயை பூரணமாகக் குணப்படுத்தும் ஊசி மருந்து ஒன்றை பல்கேரிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது

# மாணவருக்கு ம. எண்ணை

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ் பல்கலைக்கழகத்தில் பயிலும் தென் தமிழீழ மாணவர்களுக்கும், விஞ்ஞானபீட மாணவர்களுக்கும் மறுமலர்ச்சிக் கழகம் இன்று மண்ணெண்ணையை விநியோகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

# 7 மாதக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளப்பட்டது. கருப்பை போன்ற ஒன்றும், கை கால்கள் உருவெடுத்த சிசு [இறந்த நிலையில்] ஒன்றும் குழந்தையின் வயிற்றில் இருந்து எடுக்கப்பட்டன. வயிற்றில் இருந்த சிசுவில் இரத்தோட்டம் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கப்பட்டது. சிசுவை சத்திர சிகிச்சைமூலம் வெளியே எடுக்காவிட்டால் அது வளரக் கூடிய சாத்தியம் உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாயின் வயிற்றில் ஆண் குழந்தையுடன் இன்னொரு சிசு [இரட்டைச் சிசு] கருக்கொண்டிருக்க வேண்டும் என்றும் அது குழந்தையின் வயிற்றில் குறைவிருத்தி நிலையில் இருந்திருக்க வேண்டும் என்றும் வைத்திய நிபுணர் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏழு மாத ஆண் குழந்தையின் பெற்றோர் ஆவரங்காலைச் சேர்ந்தவர்கள். இளவயதுத் தம்பதியினர். [அ-15]

# நல்லூரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இனப் படுகொலையை உலகத்துக்கு எடுத்துக்காட்ட இந்த பிரார்த்தனை வழிகாட்டும்'' —என்று அங்கு உரையாற்றிய பலரும் தெரிவித்தனர். [அ-3]

# வன்னியை படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வுரைக் கண்ணோட்டத்தில் பி. பி. ஸி. மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியின் 90 வீத பிரதேசம் விடுதலைப் புலிகள் வசமே உள்ளது.

வன்னியை ஸ்ரீலங்காப் படைகள் பிடிக்க முயன்றாலும், அவர்களால் வீதிகளை மட்டும்தான் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும்.

வன்னி போன்ற காட்டுப் பிரதேசத்தில் போரிட்டு நிலைத்து நிற்க ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு பின்பலமும் இல்லை; ஆட்பலமும்இல்லை

எனவே வன்னியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அடிவாங்கினாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை.

கிழக்குப்பகுதியிலும் அரசுப் படைகளின் பிடி உறுதியாக இல்லை. அங்கு வீதிகளை அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்னவோ உண்மை தான். ஆனால் அதுவும் பகற்பொழுதில் தான்.

''உங்களால் முடியும் என்றால் ஜூன் மாதத்துக்குள் ஏதேனும் வெற்றியைக் காட்டுங்கள்''—என்று ஸ்ரீலங்கா படைகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா காலக்கெடு விதித்திருக்கிறார்.

ஆனால் அவர் இப்போது அமைதியை விரும்புகிறார். அது தான் அவருக்கு இப்போது தேவைப்படுகின்றது

ஆனால் அவர் தமிழ் சிறுபான்மையினரின் அபிலாஷைகளை பரிவுடன் பரிசீலிக்கும் அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. சுமுக நிலை தோன்றவும், யுத்த நிறுத்தம் ஏற்படவும் தேவையான எந்த நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை.

ஆகையினால் அடுத்து வரும் இரண்டு மாதங்களும் போர் தொடரும்.

''புலிகளை ஒழித்தே தீருவோம்'' என்று கடந்த எட்டு ஆண்டுகளாகத் தாம் முழங்கி வருவதைப்போல தொடர்ந்தும் ஸ்ரீலங்கா தளபதிகள் முழங்கிக்கொண்டே இருப்பார்கள்

''அடித்து நொருக்குவோம்'' என்று புலிகள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டே இருப்பார்கள்- என்று ஆய்வுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சுகந்தகுமார்
### (வீரவேங்கை தீபன்)

குமாரகோட்டம் வட்டு-கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. திருமதி க. சுப்பிரமணியம் கமலா தம்பதிகளின் புதல்வன் சுகந்தகுமார் [வீரவேங்கை தீபன்] 4-4-1991 வியாழக்கிழமை வீரமரணமடைந்தார்.

இவர் சுபாஜினி உதயகுமார், சுதாஜினி, மேனகுமார் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திரு. திருமதி ப. கந்தையா, காலஞ்சென்ற திரு. குமாரசாமி [சுகாதாரப் பரிசோதகர்] திருமதி கு. மனோன்மணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-4-91 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அவரின் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[16313] க. சுப்பிரமணியம்

## திரு. முருகேசு கந்தையா

முருகேசு கந்தையா அவர்கள் 5 - 4 - 1991 அன்று காலமானார் [இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்] சம்பியன் லேன். இவர் நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஞானசுந்தரியின் அன்புக் கணவரும் ஞானராசன், ஞானச்சந்திரன், ஞானரஞ்சினி ஞானேஸ்வரி, ஞானசீலன், ஞானபூபதி, இந்திரன், சொர்னன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குனானந்தன், நகுலேஸ்வரன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சபேசன், சதீஸ்சன், அபிராமி, ஆரணி, பாரதி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் சம்பியன்லேனில் உள்ள அவரது இல்லத்தில் 6 - 4 - 1991 இன்று காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்

சம்பியன் லேன்,
கொக்குவில். [16366]

## அம்பிகாவதியம்மா

வருணன், மலாயன் பென்சனியர்—காலம் சென்ற வ செல்லையா [இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்னாள் பூசகர்] அவர்களின் அன்பு மனைவி அம்பிகாவதியம்மா 05-04-91 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் திலகேஸ்வரி [பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி], புவனேஸ்வரி [குண்டன்மால்ஸ் கொழும்பு], சிவகுமார் [சுவிஸ்], கிருஷ்ணகுமார் [லண்டன்], கமலேஸ்வரி [யாழ். பல்கலைக் கழகம்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [05-04-91] நேற்று மாலை 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று வருணன் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

''சேய் பவனம்'' தகவல்:
வருணன், செ. திலகேஸ்வரி (மகள்)
அச்சுவேலி [பலாலி ஆசிரிய மாணவி]
[16314]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org